පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290

ආයතනයේ නම :පාර්ලිමේන්තුවේ ආණ්ඩු පක්ෂ ප්‍රධාන සංවිධායක කාර්යාලය

ස්ථාවර නියෝග අංක 119(4) ප්‍රකාර රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් නිරීක්ෂණ සහ ගනු ලැබූ ක්‍රියාමාර්ග ඉදිරිපත් කිරීම

பாராளுமன்றத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : பாராளமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகம்

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புகளும் முன்னெடுப்புகளும் பற்றிய அறிக்கையிடல்

Parliamentary Series No. : 290

Name of the Institution : Office of the Chief Government Whip of Parliament

Submission of observations and steps taken with regard to the reports presented to the Parliament by the Committee on Public Accounts in terms of the Standing Order No. 119(4)

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புகளும் முன்னெடுப்புகளும் பற்றிய அறிக்கையிடல்

பாராளுமன்றத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : பாராளமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகம்

குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள்/தற்போதைய நிலை
உள்ளகக் கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்பகடயில் பராமரிக்கப்படவில்லை. 2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச்சொல்லை கணக்காளர் அல்லது அவரிடம் அனுமதி பெற்றுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் மட்டும் பயன்படுத்தவில்லை. 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, விசேட செலவுகள் பிரிவிற்கு சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படவில்லை. நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 2 கூட்டங்களையாவது நடத்தியிருக்கவில்லை.	I. **2021** ஆம் ஆண்டிலே உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் **2023** ஆம் ஆண்டிலே உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டது. II. 2021 ஆம் ஆண்டில், கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அலுவலகத்தின் அனைத்து கணக்குப் பணிகளும் நிதி உதவியாளர் ஒருவரின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், சம்பள தயாரிப்புடன் தொடர்புடைய மென்பொருளின் கடவுச்சொல் அவரினால் பயன்படுத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டிலே கணக்காளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டவுடன் கணக்குப் பிரிவிற்குரிய அனைத்து மென்பொருள்களினதும் கடவுச்சொற்கள் கணக்காளரின் மேற்பார்வையின் கீழ் பயன்படுத்தப்படுகின்றது. III. 2021 ஆம் ஆண்டிலே கோவிட் தொற்றுநோய் காரணமாக, வாகனங்களின் பயன்பாடு மிகக் குறைந்த மட்டத்தில் இருந்ததுடன், வாகனங்களின் எரிபொருள் எரிப்பு சோதனைகளுக்கு வாய்ப்பு இருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக எரிபொருள் எரிப்பு சோதனைகள் மெற்கொள்ளப்படுகின்றன. IV. 2021 ஆம் ஆண்டிலே உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளது.

நிறுவனம் பற்றி பொது மக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்காக வெப்தளமொன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற வெப்தளம் மூலமாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்புப் பதிவதற்காக வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது. ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இனங்கண்ட நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை.	I. பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சி முதற்கோலாசான் அலுவலகம் தனியான செலவினத் தலைப்பின் கீழ் இயங்கினாலும், இந்த அலுவலகத்தின் பணிகள் இலங்கைப் பாராளுமன்றத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன.இந்த அலுவலகத்தின் ஊடாக பாராளுமன்றத்தின் அரசாங்கக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் ஒருங்கிணைப்புச் செய்யப்படுவதுடன் குறித்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களது தகவல்களும் இலங்கை பாராளுமன்றத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே, தனியான இணையத்தளத்தை பராமரிக்க வேண்டிய தேவை இதுவரை எழவில்லை என்ற போதிலும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தேவைகளின் அடிப்படையில் தனியான இணையத்தளமொன்றை பராமரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுக்கான செயல்திறன் ஒப்பந்தங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. II. 2021 ஆம் ஆண்டின் முதல் 03 காலாண்டுகளில் கொரோனா தொற்று நிலைமை காரணமாக திறனவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்ய முடியவில்லை. எவ்வாறாயினும், இறுதி காலாண்டில், அனைத்து அலுவலர்களையும் உள்ளடக்கியவாறு திறன் இலக்குகளை அடைவதற்காகவும் மற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் தொடர்புடைய பயிற்சி பட்டறைகளில் இரண்டு முறை அலுவலர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டுள்ளனர். III. 2022 ஆம் ஆண்டு முதல் அனைத்து பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன.

எம்.டப்ளியூ. ஜகத் குமார
அரசாங்கக்கட்சி முதற்கோலாசானின் செயலாளர்
2024.02.02